# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


ஊடக செய்தி 10 / 2019 நாள் : 12.06.2019

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்

பொதுச் செயலாளர் மு.அன்பரசு வெளியிடும்

## ஊடகச் செய்தி

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியனின் பணியிடை நீக்கம்

## மாண்புமிகு தமிழக முதல்வர் நேரடியாக தலையிட்டு பணியிடை நீக்கத்தை ரத்து செய்து பணி ஓய்வு ஆணை வழங்கிட வலியுறுத்தி

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தொடர் உண்ணாவிரதப் போராட்டம் சென்னையில் எழுச்சியுடன் துவங்கியது

தேர்தல் முடிந்தும் தமிழகத்தில் ஜாக்டோ-ஜியோ நடத்திய காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு பணி உயர்வு வழங்கப்பட மாட்டாது என அறிவிப்பின் மூலம் அதிர்ச்சியூட்டியது அரசு. இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பதவிஉயர்வு கிடைக்காதோ என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பாதுகாவலனாய் உரிமைகளைப் பெறுவதில் சமரசமில்லாப் போராட்டங்களை நடத்தி சிறை செல்லக்கூட தயங்காத இயக்கமான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் மே 31ஆம் தேதி ஓய்வுபெற இருந்த நிலையில், தேர்தல் தோல்வி மற்றும் ஊழியர்களிடையே போராட்ட உணர்வைத் தோற்றுவித்தவர் என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவரை இவ்வரசாங்கம் 31.5.2019ஆம் தேதி பணி ஓய்வு பெறவிடாமல் தடுத்திருக்கிறது. இதன்மூலம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதும், இனிமேல் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டம், ஆர்ப்பாட்டம், தர்ணா, கண்டனப் போராட்டம் போன்றவற்றில் கலந்து கொள்ளவிடாமல் பயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும் அதிகார வர்க்கத்தின் எண்ணமாகும்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் திரு.மு. சுப்பிரமணி 2003-ல் நடந்த அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றுவிட்டு வந்தவர் என்பதும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் உரிமைக்காக பலமுறை கடும் போராட்டங்களை நடத்தியவர் என்பதும் அவரை ஓய்வுபெறச் செய்யவிடாமல் தடுப்பதன் மூலம் அவருக்கு பெரியதாக நெருக்குதல் ஏற்படுத்த முடியாது என்பதும் அதிகார வர்க்கத்திற்குத் தெரியும். ஆனால் அவர் பணி ஓய்வு பெறுவதை நிறுத்தி வைப்பதன் மூலமாகவும் பணியிடை நீக்கம் வாயிலாகவும், தற்போதுள்ள நிர்வாகிகள், புதியதாக அரசுப் பணியில் சேர்ந்தவர்கள், சங்கத்தின் பணிகளில் உதவுபவர்கள், சாதாரண அரசு ஊழியர்கள் போன்றவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியே வர பயம் உண்டாக்குவது அவர்கள் திட்டமாக இருக்கலாம், "பார்த்தீர்களா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இனிமேல் போராட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் என்று யாராவது வெளியே வந்து பாருங்கள், உங்களுக்கும் அதே கதிதான்" என்று மிரட்டுவதான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்திருக்கிறது இந்த அதிகார வர்க்கம்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தமிழக அரசுடன் ஒரு சுமூகமான உறவுடன் நிர்வாகத்தை நடத்துவோம் என்று விரும்பினாலும், உங்களுடைய உறவும், அணுகுமுறையும் எங்களுக்குத் தேவையில்லை என்று புறந்தள்ளுகிற வெறுப்பு மனப்பான்மையைத்தான் இந்தப் பணியிடை நீக்கம் காட்டுகிறது. அரசு ஊழியர் சங்கம் எப்போதும் ஊழலுக்கு எதிராக போராடுகிற இயக்கம் என்பதையும், ஊழலுக்கு எதிரான பல போராட்டங்களை அது முன்னின்று நடத்தியிருக்கிறது என்பதையும் அரசாங்கத்திற்கு தெரியாததல்ல. அப்படிப்பட்ட ஒரு அமைப்பின் மாநிலத் தலைவரான அப்பழுக்கற்ற நபர் மீது பொய்யான புகாரினை திட்டமிட்டு ஜோடித்து, பதிவு செய்து அவரை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பணியிடை நீக்கம் செய்திருக்கிறார் என்பது முழுக்க முழுக்க காழ்ப்புணர்ச்சி அரசியல்.

இந்த விவரங்கள் தமிழக முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் தெரியுமா என்பது தெரியவில்லை. ஆனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எப்போதும் அரசுக்காக உழைப்பவர்கள் அதன் திட்டங்கள் மக்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்று சேவை செய்பவர்கள். அவர்கள் தங்களுக்கான உரிமைகளுக்காக களமிறங்கி போராடினாலும் போராட்டம் முடிவுக்கு வந்த உடனே அரசுடன் சுமூகமான உறவையும் அணுகுமுறையையும் மேற்கொள்ளவே எப்போதும் விரும்புபவர்கள். அரசும் போராட்டங்கள் முடிந்தவுடன் அரசு ஊழியர்களை தங்கள் குழந்தைகளைப் போல பாவித்து பகைமை மனப்பான்மையை வளர்க்காமல் புரிந்துணர்வுடன் இரு தரப்பினரும் சேர்ந்து மக்களுக்கான சேவை செய்வதே இதுநாள்வரை வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இத்தனை காலங்கள் இல்லாத அணுகுமுறையாக கடந்த இரண்டு ஆண்டு காலமாக அரசு ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக்காக போராடியதை அரசு தன்னுடைய கௌரவப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு விட்டதோ என்று எண்ணும் விதமாக பலவிதமான அடக்குமுறைகளை கையாளுவதிலிருந்து இந்தஅரசு அரசு ஊழியர்களை தன்னுடைய குழந்தைகளாக பாவிக்காமல் எதிரிகளாக பாவிக்கிறதோ என்ற பலமான ஐயப்பாடு எழுந்துள்ளது.

ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் பங்கேற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 17(பி) குற்றச்சாட்டு நிலுவையில் இருந்தாலும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கவோ, பணி ஓய்வுபெற அனுமதிக்கவோ தடையில்லை என்று நீதிமன்ற உத்தரவுகள் உள்ள நிலையில் விருதுநகர் ஆட்சியரின் பணியிடை நீக்க உத்தரவு அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டது என்பதில் சந்தேகமில்லை.

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601


எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இப்பிரச்சனையில் நேரடியாகத் தலையிட்டு சுமூகமாகத் தீர்க்க முன் வர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இந்தப் பிரச்னையில் உடனடியாக தலையிடாத பட்சத்தில் தொடர்போராட்டங்களை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அரசின் அடக்குமுறைகளையும், பழிவாங்கும் நடவடிக்கைகளையும் கண்டிக்கும் விதமாகவும் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியனின் பணியிடை நீக்கத்தை ரத்து செய்து அவர் பணிஓய்வு பெற அனுமதிக்க வலியுறுத்தி இன்று

**12.6.2019 முதல் சென்னை, சேப்பாக்கம் வளாகத்தில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் பங்கேற்புடன் தொடர்உண்ணாநிலை அறப்போராட்டம் துவங்கியது**

**அரசின் கண்டுகொள்ளாத போக்கு தொடருமேயானால் 16.6.2019 அன்று மாநில செயற்குழு கூட்டத்தை நடத்தி அடுத்தகட்ட வீரியமான போராட்டத்தினை உறுதியுடன் நடத்திட முடிவெடுக்கும்**

மு. அன்பரசு

**(மு. அன்பரசு)**
பொதுச் செயலாளர்